சரக்கின் தரம் அதைவிட முக்கியம். சரக்குகளின் தரங்களை வைத்து ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, சிறப்பு அங்காடிகளில் தரமுள்ள சரக்குகள் குறைவான விலைக்குக் கிடைக்கும்.

*157 Q.—Thiru N. KASIRAMAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the employees of the Super-market (Karpagam) at Vellore have been given a notice of recovery for the shortages in various sections of the Co-operative Society; and

(b) whether opening stocks were allowed to be verified by the employees from whom the recoveries have been ordered?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) சரக்குகளைப் பெற்றுக்கொண்டதற்கு எழுத்துமூலம் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

Thiru K. S. KOTHANDARAMIAH : Sir, what is the total number of Supermarkets that are working in our State—

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி வேலூர் சூப்பர் மார்க்கெட் பற்றியது.

திரு. கே. விநாயகம் : வேலூர் கற்பகம் சூப்பர் மார்க்கட்டில் என்ன தவறு நடந்து இருக்கிறது? எவ்வளவு கையாடல் செய்து இருக்கிறார்கள்? அப்படிச் செய்தவர்கள் நிர்வாகத்தில் இருப்பவர்களா ? என்ன தண்டனை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது ? அவர்களிடமிருந்து வசூல் செய்வதோடு அவர்கள் செய்த குற்றத்திற்காக என்ன தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, பணம் கையாடல் என்பதல்ல. சரக்குகள் இருப்பு குறைவாகக் காணப்பட்டது. அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் கையெழுத்திட்ட அளவுக்குச் சரக்குகள் இல்லையென்றதால் குறைவாக இருப்பதற்காக, பணத்தை வசூல் செய்வதற்கு, நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதற்காக, குற்றப் பிரிவிலே, கிரிமினல் வழக்குப் போடுவது என்றால், எந்த அளவுக்குக் குறைவு செய்திருக்கிறார்கள் என்று தெரியவேண்டியிருக்கிறது. ஆகவே முதலில் நஷ்டத்தைச் சரிக்கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனைகள்

* 158 வினா:—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக அரசு அதிகப்படியாக E. S. I. மருத்துவ மனைகளை ஏற்படுத்த உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, தற்போது இல்லை.